# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் தன்னுடைய ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 கட்டாய முகக் கவச உப சட்டத்தினை புதுப்பிக்கிறது மற்றும் நீட்டிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 17, 2021) – பீல் பொது சுகாதார அமைப்பின் அறிவுரையின் பேரில், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் தன்னுடைய ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 கட்டாய முகக் கவச உப சட்டத்தினை புதுப்பிக்கிறது மற்றும் செப்டம்பர் 30 வரை நீட்டிக்கிறது.

கோவிட்-19 கட்டாய முகக் கவச உப சட்டத்தின் கீழாக, ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து பொதுக் கட்டிடங்களுக்கு உள்ளாகவும், மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணியத் தேவைப்படுகிறது. முன்னதாக ஸ்கார்ஃப்கள், பந்தனாக்கள், கழுத்து கெய்ட்டர்கள், அல்லது கழுத்து ஸ்வெட்டர்கள் மற்றும் வெளிவிடும் மூச்சு செல்வதற்கான முக கவசங்கள் போன்ற முகத்திரைகள், அனுமதிக்கப்பட்ட முக கவச வடிவங்களாக இருந்தன. இந்த வகையிலான முகத்திரைகள் இந்த கட்டாய சட்டத்தின்படி இனிமேல் அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் திருத்தப்பட்ட இந்த உபசட்டத்தின் கீழாக, உணவு சாப்பிட அல்லது பானம் அருந்த அதற்கென குறிப்பிடப்பட்ட இடத்தில் இருந்தபடி அப்படிச் செய்வதற்காக மட்டுமே முக கவசங்கள் அகற்றப்படலாம்.

தடுப்பூசி செலுத்தும் பணி பீல் பிரதேசத்தில் அதிகரித்து வரும் அதே சமயத்தில், கோவிட்-19 இன் சமுதாயப் பரவல் விகிதம், மற்றும் விரைவாகப் பரவி வரும் உருமாறிய வைரஸ் வகைகளும் பெரும் கவலை தரும் விஷயங்களாக உள்ளன. இப்படியான பரவலைத் தடுக்க, உடல்ரீதியான சமூக விலகல், நல்ல சுகாதாரப் பழக்கம் மற்றும் முக கவசம் அணிதல் போன்ற தங்கள் தரப்பு சமூகக் கடமைகளை குடியிருப்புவாசிகளும் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

மருத்துவம் அல்லாத முக கவசம் மற்றும் தனிநபர் பாதுகாப்பு சாதனம் (Personal Protective Equipment (PPE)) ஆகியவற்றின் பயன்பாடு பற்றி மேலும் அறிய, வருகை தரவும்: peelregion.ca/coronavirus/prevention/#masks

வணிக கட்டிடங்கள் மற்றும் இதர கட்டிடங்களின் பராமரிப்பாளர்கள் பற்றிய கூடுதல் தகவல்கள் கிடைக்குமிடம்: brampton.ca/masks.

கோவிட்-19 க்கு எதிரான ப்ராம்ப்ட்டன் நகரின் நடவடிக்கைகள் பற்றிய மிக சமீபத்திய தகவல்களுக்கு வருகை புரியவும்: brampton.ca/COVID19.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமூக ஈடுபாடு,
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca